இதழ்
01

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

# தமிழ்க்கதிர்

மாணவர் சஞ்சிகை    சித்திரைத் திங்கள் 2023

2054
க



தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

www.tsch.org.au

இந்த சஞ்சிகை ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தால் வெளியிடப்பட்டது.

எல்லாப் பதிப்புரிமையும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்திற்கே உரியது.

முதலாவது பதிப்பு வெளியீடு - 01 July 2023

இதழ் ஆசிரியர்கள் குழு

ஆண்டு 11

1. கவிதாரனி மனோகரன்

2. விக்னேஷ் சுஜந்தன்

3. மஹதி கார்த்திகேயன்

5. யாழினியன் ஜசிதரன்

5. மனஸ்வினி கார்த்திகேயன்

ஆண்டு 10

1. சிவலிங்கேசர் சிவகுமார்

2. தனிஷ்கா சிவகுமார்

3. வேதவர்ணா ராஜா

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் தலைவரின் வாழ்த்துச் செய்தி**

அன்பான எமது மாணவச் செல்வங்களே,

தமிழ் மீதுள்ள உங்கள் பற்று எழுத்துருவில் சிறப்பாக வளர வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்க்கதிர் புதுப்பொலிவு பெற்று இன்று உங்களின் கைகளில் தவழ்கின்றது.

தமிழ்க்கதிர் சஞ்சிகையில் மாணவர்கள் மிக ஆர்வத்தோடு பங்கெடுத்துக் கொண்டது வரவேற்கத்தக்கது. அடுத்து வரும் சஞ்சிகைக்கான உங்கள் படைப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் ஆர்வவத்தை அறியும் பொழுது மனம் புழகாங்கிதமடைகிறது.

தமது ஆக்கங்கள் மூலம் தமிழ்க்கதிரில் பங்கெடுத்த மாணவர்களுக்கும், இம்மலரை அழகுற வடிவமைத்த இதழ் ஆசிரியர்களுக்கும், தமிழ்க்கதிர் வெளிவர உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். தமிழ்க்கதிர் தொடர்ந்து வெளிவந்து எமது மாணவர்களின் தமிழ் எழுத்தாற்றலை வளர்க்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் அன்புடன்,

சிவகுமார் சிவஞானசுந்தரம்
தலைவர்
தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் அதிபரின் வாழ்த்துச் செய்தி

மீண்டும் மிடுக்குடன் "தமிழ்க்கதிர்" எனப் புதுப் பெயருடன் மலர்ந்துள்ள மாணவர் சஞ்சிகையினை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

எமது மாணவர்களின் எழுத்துத் திறனை வளர்க்கவும் மேம்படுத்தவும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பளிக்க இம் மலர் வெளியீடு தொடங்கியது. ஆண்டொருமுறை கையெழுத்துப் பிரதியாக ஒளிபரப்பிய கதிர் தொழில்நுட்ப வளர்ச்சியையும் உள்வாங்கிப் புதுப்பொலிவுடன் மலர்ந்திருக்கிறது. தவணைக்கு ஒன்றென மலரவுள்ளது விசேடமாகும். பாலர் வகுப்பு முதல் உயர்தர வகுப்பு மாணவர்கள் பலரதும் பல தரப்பட்ட ஆக்கங்களைத் தாங்கி வந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

இம் மலர் வெளியீட்டினைச் செய்ய மிகுந்த அக்கறையுடன் செயற்பட்ட நிர்வாகத்தினருக்கும் வகுப்பாசிரியர்களுக்கும் மலர்க்குழு உறுப்பினர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நன்றி கூறிப் பாராட்டி மகிழ்கிறேன்.

தொடர்ந்து தமிழ்க்கதிர் வெளிவரவேண்டும். மாணவர்கள் அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்கவேண்டும். மாணவர்கள் எல்லோரும் தத்தமது பங்களிப்பினை வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்
திருமதி. புவனேஸ்வரி புருஷோத்தமர்
அதிபர்
தமிழ்க்கல்வி நிலையம், ஹோம்புஷ்

## வாழ்த்துப்பா

கதிரவனுக்குத் தானே கதிர்

கன்னல்த் தமிழுக்கேது கதிர்?

நெல்லுக்குத் தானே கதிர்

நல் தமிழுக்கேது கதிர்?

கதிரொளி வீசியது-மழலைக்

கைவண்ண ஓவியங்களிலே

கதிர்களுடன் தமிழ் ஒளிவீசியது-மாணவர்களின்

கைவண்ண ஆக்கங்களிலே

தொடர்ந்து வா தமிழ்க்கதிரே-ஆக்கங்களைச்

சுமந்து வா தமிழ்க் கதிரே

தமிழ்க் கதிரைத் தழைத்தோங்கச் செய்யும்


தமிழ் மாணவர்களுக்கு வாழ்த்துகள்.

ஆசிரியர் சரவணமுத்து தேவராசா

உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | ஆக்கங்கள் - பாலர் முன்பள்ளி | 1 - 2 |
| 2 | ஆக்கங்கள் - பாலர் கீழ்ப்பிரிவு | 3 - 7 |
| 3 | ஆக்கங்கள் – பாலர் மேற்பிரிவு | 8 - 10 |
| 4 | ஆக்கங்கள் – ஆண்டு 01 | 11 - 12 |
| 5 | ஆக்கங்கள் – ஆண்டு 02 | 13 - 16 |
| 6 | ஆக்கங்கள் – ஆண்டு 03 | 17 - 19 |
| 7 | பாரதியார் காட்டிய புதுமைப் பெண்ணில் எனக்கு பிடித்த வரிகள் | 20 - 20 |
| 8 | கல்வியின் சிறப்பு | 21 - 21 |
| 9 | கல்வியே கண் | 22 - 22 |
| 10 | உணவுடன் - நமது தொடர்பு அன்றும் இன்றும் | 23 - 24 |
| 11 | அவுஸ்திரேலியாவின் வரலாறு | 25 - 26 |
| 12 | தமிழர் ஆடைகள் | 27 – 28 |
| 13 | கோபம் | 29 - 30 |
| 14 | கலைவிழா | 31 - 32 |
| 15 | சிறுகதை வாசிப்பு அனுபவம் அமரர் கல்கியின் கடிதமும் கண்ணீரும் | 33 - 34 |
| 16 | புது வெள்ளம் - பொன்னியின் செல்வன்: பாகம் ஒன்று | 35 - 36 |



அருண் - முரளிகிருஷ்ணா
பாலர் வகுப்பு
பிள்ளையார்


கிளி
-இனியன்
24|3|23
பாலர் வகுப்பு




தீபாவளி


பா. கா. ப்ரணவ்
L.K.G






லினிசா LKG-A



மிருகக்காட்சிசாலை
மீனாட்சி



பழத் தட்டு

வணக்கம்

நல்வரவு



செ.ரேஷிகா
பாலர் மேல் பிரிவு


எனக்கு பிடித்த விண்கலம்
இது மிகவும் வேகமாக
பறக்கும்
By
ஆதவன்
ஆண்டு-1V

# ஒட்டகச்சிவிங்கி



1 மிருகக்காட்சிசாலையில்
ஒட்டகச்சிவிங்கியைப்
பார்த்தேன்
2 அதன் உடல் முழுவதும்
பழுப்பு நிற புள்ளிகளுடன்
மஞ்சள் நிறத்தில் இருந்தது
3 அது நீண்ட கழுத்தை
உடையது மற்றும்
உயரமான மரத்தின்
இலைகளைத் தின்று
கொண் டிருந்தது.
4 இது எனக்கு மிகவும்
பிடித்த விலங்கு.

பிரனுஷ்
ஆண்டு 1V

# என் அம்மப்பா

எனக்கு என் அம்மப்பாவை மிகவும் பிடிக்கும். எனக்கு பாடம் சொல்லித் தருவார். பாடசாலைக்கும், பூங்காவிற்கும் கூட்டிச் செல்வார். என் அம்மப்பா எனக்கு விருப்பமானவற்றை வாங்கித் தருவார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிட்னி முருகன் கோயிலுக்கு கூட்டிச் செல்வார். கோயிலில் அப்பு சாமி கும்பிட்டவுடன் பூரி வாங்கித் தருவார். என் அம்மப்பா என்னை மாணிக்கத்தங்கம் என்று அன்புடன் கூப்பிடுவார். இன்று என் அம்மப்பா என்னுடன் இல்லை. அவர் அப்புசாமியிடம் போய்விட்டார். நாங்கள் அவர் இருக்கும் கதிரையில் அம்மப்பாவின் படத்தை வைத்து கும்பிடுகிறோம். எனக்கு எப்போதும் நல்லதையே செய்வார். நான் என் அம்மப்பாவை ஒருநாளும் மறக்கமாட்டேன்.



லைலா
முரளிகிருஷ்ணா.
ஆண்டு 2K ♥


# பழங்கள்


பழங்கள் எமக்கு மிகவும் பயன் உள்ளவை. இவை சத்து மிக்கவை. உணவுக்கு பின் பழங்களை உண்பது நல்ல பழக்கமாகும். பழங்களை உண்பதால் நோய்கள் வராமல் தடுக்கலாம். பழங்களில் இருந்து பழச்சாறு செய்யலாம். பழங்கள் பசியைத் தீர்ப்பதோடு தாகத்தையும் போக்கும் பழங்கள் உணவைச் சமிபாடு செய்ய உதவும். மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் என்பன முக்கனிகள் எனப்படும் பழங்கள் நல்ல கண்பார்வைக்கும் சிறந்த தோலுக்கும் அவசியம். எனவே தினமும் ஒரு பழமாவது உண்ண வேண்டும்.

நிக்ஷா நிமலன்
ஆண்டு 2











## எனது யாழ் பயணம்...

நாங்கள் ஆச்சியை (அம்மாவின் அம்மம்மா) பார்பதற்காக யாழ்ப்பாணம் சென்றோம். ஆச்சி என்னை அன்புடன் கொஞ்சி வரவேற்றார். எனக்கு விரும்பிய உணவுகளை தனது தள்ளாத வயதில் சமைத்து தந்தார்.

அங்கு சென்றபோது பெரிய தாத்தாவுடன் மோட்டார் சைக்கிளில் திரிந்தேன். சந்தைக்கு சென்று மரக்கறிகள் வாங்கினேன். ஆடு மாடுகளுக்கு இலை குழைகள் கொடுத்தேன்.

பல கோவில்களுக்கு சென்று சுவாமி கும்பிட்டேன். தை பொங்கலை வாணவேடிக்கையுடன் நண்பர்களுடன் கொண்டாடினேன். சந்தோசமாக அவர்களுடன் தமிழில் கதைத்தேன்

எனது யாழ் பயணம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

கணேஷ் விக்னஹரன்
ஆண்டு-2

Tanviksha. A
Year 2S

# மாமல்லபுரம்

அ. தன்விக்ஷா




மாமல்லபுரம் இந்தியாவின் சிற்பக்கலைகளைக் கொண்ட புராதன இடமாகும். இது உலக புராதன சின்னங்களுள் ஒன்றாக இருக்கிறது. முக்கியமாக ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட குகைக் கோயில் ஆகும். உலகிலேயே கடற்கரையில் அமைந்த மிகப்பெரிய குகைக் கோயிலாகும். இது மகாபலிபுரம் என்றும் அழைக்கப்படுகிறது.

பல்லவமன்னன் முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி 630-668) காலத்தில் இக்கோயில் பிரசித்தி பெற்றது. இது அக் காலத்தில் பல்லவர்களின் செழிப்பான துறைமுகமாக இருந்தது. தமிழ்நாட்டின் பெருமைக்குரிய மாமல்லபுரம் உலகம் முழுவதிலும் உள்ள ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.



நான்

என் பெயர் வருணவி.
நான் தமிழ் பள்ளியில்
ஆண்டு மூன்று படிக்கிறேன்.
என் வீட்டில் அம்மா, அப்பா,
பாட்டி மற்றும் தம்பி
உள்ளனர். நான் வயலின்
மற்றும் இசை பயின்று
வருகிறேன். எனக்கு
தோழிகளோடு விளையாட
மிகவும் பிடிக்கும்.


சி. ஆதவ்
காலை கதிரவன்
காலை ஒளி கண்கள் விழித்திட,
கதிரவன் வரவும் மகிழ்வைத தந்திட,
இனிய கீதங்கள் இதமாய் இசைக்கையில்,
உற்சாகமாக எழுவோம் இறைவனுக்கு நன்றி
இனிய காலை வணக்கம்

# தைப்பொங்கல்



ஆக்கம்: பிரீத்தி ஜக்சன்

தை மாதம் முதலாம் நாள் தைப்பொங்கல் திருநாள் ஆகும். தைப்பொங்கல் ஒரு தமிழர் பண்டிகை ஆகும். இந்த உலகில் உள்ள எல்லோருக்கும் உணவைத் தருகிற விவசாயிகளுக்கும், உயிர் வாழ, பயிர் விளைய உதவும் சூரியனுக்கும், வயலில் உதவும் மாடுகளுக்கும் நன்றி செலுத்தும் முகமாக தைப்பெங்கல் கொண்டாடப்படுகின்றது. "தை பிறந்தால் வழி பிறக்கும்!" என்பது நம்பிக்கை ஆகும்

பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணில் எனக்குப்

பிடித்த வரிகள்



ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்;
ஞான நல்லறம், வீர சுதந்திரம், பேணு நற்குடிப்
பெண்ணின் குணங்களாம்;
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை
மாதர் திறம்புவதில்லையாம்;
சாத்திரங்கள் பலபல கற்பாராம், சவுரியங்கள் பலபல
செய்வராம்; மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்.
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்;
காத்து மானிடர் செய்கையனைத்தையும் கடவுளர்க்கினி
தாகச் சமைப்பராம்;
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்;
இளைய நங்கையின் எண்ணங்கள் கேளீரோ!

ஆண்டு 4 -அமரா ஜெயகணேஷ்

# கல்வியின் சிறப்பு

மனித வாழ்க்கையில் உயர்வான எண்ணங்களும் உன்னதமான குணங்களும் தோன்ற வேண்டுமாயின் கல்வி என்பது அவசியம். வாழ்க்கை என்ற வீட்டில் கல்வி என்ற விளக்கு ஏற்றப்பட்டால் தான் நமது வாழ்வானது பிரகாசிக்கும். கல்வி ஒரு மனிதனது அறிவுக் கண்களை திறக்கின்றது.

"பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று ஔவையார் கூறுகின்றார். அதாவது எவ்வளவு கடினப்பட்டாவது கல்வியை பெற்றுவிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். இதன் மூலம் அதிகாலம் தொட்டே கல்வியின் முக்கியத்துவம் பற்றி அறியலாம். குடும்பத்தையும், நாட்டையும் முன்னோக்கிக் கொண்டு செல்லவும், வறுமையைப் போக்கவும் கல்வி மிகமிக முக்கியமானதாகும்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

என்கிறார் திருவள்ளுவர். அதாவது உலகத்தில் மனிதர்களுக்கு கல்விதான் சிறந்த செல்வம். ஏனைய செல்வங்கள் இதற்கு இணையாக மாட்டாது என்பது இதன் பொருள்.

கல்வி கண் போன்றது. "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" சிறந்த கல்வி மனிதனை உயர் இடத்திற்கு எடுத்துச் செல்லும். எனவே

கற்போம்!
கற்று மகிழ்வோம்!!
வாழ்வில் உயர்வோம்!!!

சஜ்வித் சுவாதிஜ்



## கல்வியே கண்

உடல் உறுப்புகளில் கண் மிகவும் பிரதானமானது. கண் இல்லாதவர்களால் உலகத்தில் பலகாரியங்களைச் செய்யமுடியாது. எனவேதான் திருவள்ளுவர் கல்வியைக் கண்ணுக்கு ஒப்பிட்டுள்ளார்.

'கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்.'

அதாவது கல்வி கற்றவர்கள் மட்டுமே கண் உடையவர்களாக கருதப்படுவார்கள், கல்வி கற்காதவர்கள் இரண்டு கண்கள் இருந்தும் கண் இல்லாதவராகவே கருதப்படுவார்கள்.

கல்வி கற்றவர்களிற்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டு. செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச்செல்வம் ஆகும். கல்விச்செல்வமானது தீயினாலோ வெள்ளத்தாலோ அழியாது. திருடர்களால் திருட முடியாது. கல்வியானது ஒரு மனிதனை சிறந்த ஒழுக்கம் உள்ளவனாக மாற்றுகின்றது.. கற்றவர்களிற்கு அவர்களுடைய ஊர், நாடு மட்டுமல்லாது செல்கின்ற இடமெங்கும் மதிப்பு இருக்கும். நாம் கற்ற கல்வியை மற்றையவர்களுடன் பகிர்வதால் அது ஒருபோதும் குறையாது. மாறாக எமக்கு அறிவு வளர்ந்து கொண்டே போகும்.

இளமையில் கல்வி கற்கும்போது கல்வியானது நம்மை எதிர்காலத்தில் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும். இதனையே ஔவையார், 'இளமையில் கல்வி, சிலையில் எழுத்து' என்று கூறியுள்ளார். இளமையிற்கற்கும் கல்வி பசுமரத்தாணி போல மனதில் பதிந்துவிடும். அது கல்லில் வெட்டப்பட்ட எழுத்துப்போல அழியாது இருக்கும். இதனை "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற முதுமொழியுடனும் ஒப்பிடலாம்.

எனவே மாணவர்களாகிய நாமும் இளமையிலிருந்தே கல்வியைக் கண்ணெனக் கருதி ஐயம் திரிபுறக்கற்று நாட்டிற்கும் வீட்டிற்கும் சிறந்த பிரஜையாக உன்னத வாழ்வு வாழ்வோமாக!

**விசாகன் சுரேந்திரன்** (ஆண்டு 6)

**உணவுடன் - நமது தொடர்பு அன்றும் இன்றும்**

உணவு - நமக்கு மிகவும் பிடித்தமான, உயிர் வாழ இன்றியமையாத ஒன்று. ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒரு உணவுவகை சிறப்பாக செய்து உற்றார், உறவினர்களுடன் உண்டு மகிழும் உணவு கலாசாரம் நம் வழக்கத்தில் இருந்து வருகிறது. உலகின் சிறந்த சமையலில் ஒன்றாகும் தமிழர் சமையல், இயற்கையுடனும், கால நிலைகளுடனும் இணைந்து வளர்ந்த சமையல்.'**உணவே மருந்து**' என்ற கொள்கையைப் பழந்தமிழர் பின்பற்றி வாழ்ந்ததாக சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. தாங்கள் வாழ்ந்த நிலப்பரப்பை - குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை,மருதம் என பிரித்து, அதில் விளைந்த உணவை உண்டு வாழ்ந்தனர்.

> "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
> அற்றது போற்றி உணின்"

இவ்வாறான உணவு முறையை கடைப் பிடித்தால் உடம்பிற்கு மருந்தே வேண்டியதில்லை என்கிறார் திருவள்ளுவர்.



நாம் உட்கொள்ளும் உணவில் அறுசுவையும் இணைந்திருக்க வேண்டும். இக்காலத்தில் நவீன/விரைவு உணவு என்ற பெயரில் பெரும்பாலும் அறுசுவையில் கசப்பு, துவர்ப்பு போன்ற சுவைகள் இல்லாத பர்கர், பீட்சா போன்ற விரைவு உணவுகளை விரும்பி உண்கிறோம். ஒவ்வொரு சுவைக்கும் உடம்பில் ஒவ்வொரு தாதுக்களை உருவாக்கும் சக்தி உடையது. அதனால்தான் தித்திக்கும் உணவில் துவங்கி, கசப்பு சுவையில் உணவை முடிக்கும் போது உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பதை இன்றைய ஆராய்ச்சிகளும் உறுதி படுத்துகிறது. முக்கியமாக,சிறு பருவத்தில் தரமான சத்துள்ள உணவை உண்ண வேண்டும். உணவிற்க்கு

உடலில் ஆரோக்கியம் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தியை மீட்டுத் தரும் சக்தி உண்டு. ஊட்டச்சத்து நிபுணர்கள் உள்ளூரில் கிடைக்கும் பருவக்கால பாரம்பரிய உணவுகளைத் தேர்வு செய்து உண்ண வேண்டும் என்கிறார்கள்.

மனிதன் எப்பொழுதும் புதிய கண்டு பிடிப்புகளை நோக்கி முன் செல்வதனால் உணவிற்கும் புதிய மாற்றங்களை எதிர்பார்க்கிறான். ஆனால், இன்றும் நம்மை வியக்க வைக்கும் சங்கத் தமிழரின் இயற்கை உணவு முறைகள் ஆரோக்கியத்தைத் தரக்கூடியதாகையால், நாமும் அதைப் பின்பற்றி நோயற்ற வாழ்வு வாழ முயற்சி செய்வோம்.

உணவை நீங்கள் சாப்பிடுகிறீர்களா அல்லது உணவு உங்களைச் சாப்பிடுகிறதா என்பதை அறிந்து கவனத்துடன் சாப்பிடுங்கள்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!'

~ கரிஸ்மா விஜய் (வகுப்பு 8)



## அவுஸ்திரேலியாவின் வரலாறு



புதிய நாள் , புதிய உலகம் , நவீன சமூகம் , ஆனால் இவை அனைத்திற்கும் பின்னால் ஒரு வரலாறு , யாரும் திரும்பிப் பார்க்க விரும்பாத ஒரு வரலாறு உள்ளது - இந்த வரலாறு இல்லாமல் உலகில் ஒருபோதும் பதில் இல்லாமல் பல கேள்விகள் இருக்கும். பழங்காலத்திலிருந்தே மிகவும் புத்திசாலிகள் தங்கள் கதையைச் சொல்வதற்காகத் தலைமுறைகளைக் கடந்த வரலாற்றை வரைபடங்கள் மற்றும் பண்டைய காலத்து எழுத்து முலம், வரலாற்றை பற்றி கூறுவார்கள்.

இது போலவெ தான் நம் ஆவுஸ்திரேலியாவின் வரலாறு. அவுஸ்திரேலியாவில் 65,000 ஆண்டுகளுக்கும் மேலாக பழங்குடி மக்கள் வாழ்ந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் மிகவும் முக்கியமானவர்கள் மற்றும் ஆவுஸ்திரேலியாவில் மிகவும் மதிக்கப்படுகிறார்கள் . அவுஸ்திரேலியா அரசாங்கத்துடன் தங்கள் சம உரிமைகளுக்காக போராடுவதற்கான அங்கீகாரத்தைக் கொண்டுள்ளனர் .ஆனால் 200 ஆண்டுகளுக்கு முன்பு எல்லாம் மாறியது, பழங்குடி மக்கள் 1788 ஆம் ஆண்டு வரை அமைதியாக வாழ்ந்து வந்தனர் ஆனால் 1788 ஆம் ஆண்டு பின், ஆங்கிலேயர்கள் ஆஸ்திரேலியா மீது படையெடுத்தபோது, அவுஸ்திரேலியாவை "டெர்ரா நியூலியஸ் (Terra Nullius)" என்று அழைக்கப்பட்டது, அதாவது ஆள் நடமாட்டம் இல்லாததாகக் கருதப்படுகிறது.

1910 மற்றும் 1970 க்கு இடையில், பழங்குடி மக்களிடமிருந்து பல குழந்தைகள், தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு “அப்போது இருந்ததை விட தங்கள் பிள்ளைகள் சிறந்த வாழ்க்கை வாழ்வார்கள், நல்ல வசதிகளுடன் வாழ்வார்கள்” என்று கூறி அழைத்துச் செல்லப்பட்டனர், ஆனால் ஆங்கிலேயர்கள், பணக்கார குடும்பங்களில் வீடுகளில் தொழிலாளர்களாக வைக்கப்பட்டனர். இந்த சம்பவம் "stolen generation" என்று அழைக்கப்படுகிறது. மேலும், கடந்த காலங்களில் இது போன்ற பல சம்பவங்கள் நடந்தன, ஆனால் பின்னர் கவனம் செலுத்த யாரும் இல்லை, ஆனால் 1967 ஆம் ஆண்டில், பழங்குடி மக்கள் முறையாக ஆவுஸ்திரேலியா குடிமக்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.

வைகாசி மாதம் 27ஆம் திகதி, 1967 அன்று, 90.77 சதவீத அவுஸ்திரேலியர்கள் பூர்வீக உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பழங்குடி மக்கள் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் மக்களுக்கும் குடியுரிமை வழங்குவதற்கும் அரசியலமைப்பு வாக்கெடுப்பில் 'ஆம்' என்று வாக்களித்தனர். அப்போதிருந்து பல பழங்குடி மக்கள் தங்கள் கதையைப் பற்றியும், அவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதையும், பிரிட்டிஷ் மக்கள் நாட்டை ஆள வருவதற்கு முன்பே உயிர்வாழ்வதற்காக அவர்கள் அனுபவித்த கஷ்டங்களையும் பற்றி உலகிற்கு பகிர்ந்து கொண்டுள்ளனர்.

நான் இன்று கூறுவது பழங்குடி மக்கள் கடந்து வந்த ஒன்றிரண்டு பிரச்சினைகள்தான், ஆனால் உண்மையில் அவர்கள் கடந்து வந்த போராட்டங்கள் அதிகம், இத்துடன் வரலாற்றின் மிகவும் பரபரப்பான பதிவுகளில் ஒன்றின் ஒரு சிறிய பதிப்பை முடிக்கிறேன்.

நன்றி வணக்கம்
லாரண்யா.ராகவன்
ஆண்டு 8



**தமிழர் ஆடைகள்**

உண்டி முதற்றே உலகம் இயங்கினும் உண்டியையும் விட உலகில் இன்றியமையாதது ஆடை என்பது சான்றோர் தம் கூற்று.

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"

அதாவது பிறர்க்கு உதவியாகக் கொடுக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப்படுகின்றவனுடைய சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும். தெய்வப் புலவர் இக்குறளில் உயிர் கொடுக்கும் உண்டியை முதலில் கூறவில்லை. உடையைத்தான் முதலில் கூறியுள்ளார். ஆள் பாதி ஆடைபாதி என்ற தமிழர் மொழிகளும் இதன் காரணமாகக் கிளைத்தனவே. அறிஞர் பலரும் இதன் மேன்மையினைத் தம் சொற்களால் சிறப்பித்துள்ளனர்.

தமிழர் ஆடைபற்றிய சொற்கள்



பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரையிலும் ஆடை பற்றிய சொற்களாக நூற்றுக்கும் மேற்பட்ட சொற்கள் அமைகின்றன. இவற்றுள் பல சொற்கள் சங்கத் தமிழர் பயன்படுத்தியன. உடை, தழை, துகில், கலிங்கம், அறுவை, சிதார், ஆடை, உடுக்கை, கச்சு, ஈரணி, தானை, போர்வை, காழகம், கச்சம், சுச்சை, வம்பு, மடி, பட்டு, சீரை, படம், படாம், பூங்கரைநீலம், உத்தரீயம், கம்பலம், கவசம், தூசு, மடிவை, சிதர்வை, சிதவல், வார், மெய்ப்பை, துகின்முடி, மெய்ம்மறை, மெய்யாப்பு, வாலிது, வெளிது, புட்டகம், நூல், பக்குடுக்கை போன்றன.

சிலப்பதிகாரத்தில் கஞ்சுகம், மணிமேகலையில் உடுப்பு, சிதர், சிதவற்றுணி, வட்டுடை போன்றனவும் முகிழ்க்கின்றன. பெருங்கதை வட்டம், வடகம், மீக்கோள், குப்பாயம், நீலம், வங்கச் சாதர், சேலம் இவற்றைப் புதுமையாகக் காட்டும்.

சிந்தாமணியில் கோசிகம், பஞ்சி, கருவி, சாலிகை, பூண், ஆசு, கிழி, வட்டு, தலைக்கீடு போன்றன மேலும் இடம்பெறுகின்றன. கம்பர் கோதை, சீரம், சேலை, நீலி, வற்கலை, புட்டில் போன்றனவற்றை வடமொழி மணம்கமழத் தருகின்றார்.

இன்று நாட்டின் பல வித வளர்ச்சி நிலைகளுக்கேற்ப, மொழியில் புகுந்துள்ள உடை பற்றிய சொற்கள் பல. உதாரணமாகப் பாரசீகச் சொற்களான லுங்கி, சமக்காளம், சால்வை, உருதுச் சொற்களான லங்கோடு, குடுத்துணி, ஆங்கிலச் சொற்களான டை, வெல்வெட்டு , தெலுங்குச் சொற்களான ரவிக்கை, சொக்காய், தோவத்தி போன்ற பல சொற்களைக் கூறலாம்.

இன்றைய தமிழர் ஆடைகள்:

இன்றைய நகரவாழ் தமிழ் ஆண்கள் நீள்சல்லடம் மற்றும் மேற்சட்டை உடுத்தும் வழக்கம் உடையவர்கள். பெண்களும் அவ்வாறு உடுத்தும் வழக்கம் பரவி வந்தாலும், தமிழ்நாட்டிலும் தமிழீழத்திலும் இளம்பெண்கள் சுடிதார், சல்வார் கமீஸ் உடுத்துவதே அதிகம் எனலாம். சிறுமிகள் பாவாடை-சட்டை அணிவதும் வழக்கம். வேட்டியும் புடவையும் தமிழ் நிலப்பகுதிகளில் பொது இடங்களில் ஏற்புடைய கண்ணியமான உடையாக விளங்குகிறது.

ஏரக ரத்னா சரவணன்
வகுப்பு: ஆண்டு 9



**கோபம்**

கோபம் என்பது பல்வேறு சூழ்நிலைகளில் எழக்கூடிய ஒரு சக்திவாய்ந்த மற்றும் சிக்கலான உணர்ச்சியாகும். இது விரக்தி, ஏமாற்றம் அல்லது உணரப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு மனிதனின் இயல்பான பதில். சில சூழ்நிலைகளில் கோபம் ஒரு பயனுள்ள கருவியாக இருந்தாலும், சரியாக நிர்வகிக்க படாவிட்டால் அது அழிவுகரமான தாகவும் தீங்கு விளைவிப்பதாகும் இருக்கும். இந்த கட்டுரையில், கோபத்தின் தன்மை, தனிநபர்கள் மற்றும் சமூகத்தில் அதன் விளைவுகள் மற்றும் அதை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதை ஆராய்வோம்.



கோபம் என்பது ஒரு உணர்ச்சி நிலை, இது லேசான எரிச்சல் முதல் கடுமையான கோபம் வரை இருக்கலாம். இது பெரும்பாலும் அதிகரித்த இதயத்துடிப்பு, உயர்ந்த இரத்த அழுத்தம் மற்றும் தசைகளில் பதற்றம் போன்ற உடல் உணர்வுகளுடன் சேர்ந்துள்ளது. நாம் கோபத்தை அனுபவிக்கும் போது, நம் உடல்கள் சண்டை அல்லது விமானப் பதிலுக்கு நம்மை தயார்படுத்துகிறது. ஏனென்றால், கோபம் பெரும்பாலும் உண்மையான அல்லது கற்பனையான அச்சுறுத்தலால் தூண்டப்படுகிறது.

கோபம் தனிநபர்கள் மற்றும் சமூகத்தில் நேர்மறையான மற்றும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். நேர்மறையான பக்கத்தில், கோபம் மக்களை நடவடிக்கை எடுக்கவும், தனக்காக அல்லது மற்றவர்களுக்காக நிற்கவும் தூண்டும். இது தனிநபர்களுக்கு எல்லைகளை அமைக்கவும் அவர்களின் தேவைகளை உறுதிப்படுத்தவும் உதவும். இருப்பினும், கோபம் கட்டுப்பாடற்ற தாக இருந்தால், அது வன்முறை, ஆக்கிரமிப்பு மற்றும் சொத்து அழித்தல் போன்ற தீங்கு விளைவிக்கும் நடத்தைகளுக்கு வழிவகுக்கும். இது தனிப்பட்ட உறவுகள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம், இது பிரிவினை மற்றும் நம்பிக்கையை இழக்க வழிவகுக்கும்.

கோபத்தை பல்வேறு உத்திகள் மூலம் கட்டுப்படுத்தலாம். கோபத்தின் மூலத்தைக் கண்டறிந்து அதை நேரடியாக நிவர்த்தி செய்வதே ஒரு பயனுள்ள உத்தி. உதாரணமாக, யாராவது கோபமாக இருந்தால், அவர்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யவில்லை என்று உணர்ந்தால், அவர்கள் தங்கள் தேவைகளை தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவிக்க முடியும். ஆழ்ந்த சுவாசம், தியானம் அல்லது யோகா போன்ற தளர்வு நுட்பங்கள் பயிற்சி செய்வது மற்றொரு உத்தி. இந்த நுட்பங்கள் தனிநபர்கள் கோபத்திற்கான உடல் ரீதியான பதிலைக் கட்டுப்படுத்தவும், தங்களை அமைதிப்படுத்தவும் உதவும்.

கோபம் என்பது இயல்பான மற்றும் இயல்பான உணர்வு என்பதை அங்கீகரிப்பது முக்கியம். கோபத்தை முழுவதுமாக கட்டுப்படுத்துவது அல்லது அகற்றுவது எப்போதும் சாத்தியமில்லை, ஆனால் அதை ஆரோக்கியமான மற்றும் ஆக்கபூர்வமான முறையில் நிர்வகிக்க முடியும். மனநல நிபுணரின் உதவியை நாடுவது, நாள்பட்ட கோபத்துடன் போராடும் அல்லது தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் உள்ளவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

முடிவில், கோபம் என்பது ஒரு சிக்கலான மற்றும் சக்திவாய்ந்த உணர்ச்சியாகும், இது தனிநபர்கள் மற்றும் சமூகத்தில் நேர்மறை மற்றும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். இது இயற்கையான மனித எதிர்வினையாக இருந்தாலும், சரியாக நிர்வகிக்கப்படாவிட்டால் அது அழிவுகரமானதாகவும் தீங்கு விளைவிக்கும். கோபத்தின் மூலத்தைக் கண்டறிவதன் மூலமும், தளர்வு நுட்பங்களைப் பயிற்சி செய்வதன் மூலமும், தேவைப்படும்போது தொழில்முறை உதவியைப் பெறுவதன் மூலமும், தனிநபர்கள் தங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்தவும், ஆரோக்கியமான மற்றும் ஆக்கபூர்வமான வழியில் அதைச் செலுத்தவும் கற்றுக்கொள்ளலாம்.

சரண்யா ஆண்டு 10



## கலைவிழா

ஒவ்வொரு வருடமும் தமிழ் பாடசாலையில் கலைவிழா நடைபெறும். இந்த வருடம் ஹோம்புஷ் தமிழ் கல்வி நிலையத்தில் நாங்கள் 36வது கலை விழாவை 05.03.2023 அன்று கொண்டாடினோம்.



எங்கள் தமிழ் கல்வி நிலையத்தில் கலை விழாவின் போது ஆண்டு ஆறு முதல் ஆண்டு பத்து வரையிலான மாணவர்களே நாடகம் நடிப்பதில் பங்கேற்பார்கள். நான் ஆண்டு பத்தில் கல்வி கற்பதால் இவ்வருடம் எனக்கு நாடகம் நடிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் இறுதி வருடமாகும். எனவே ஆண்டு பத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆகிய நாங்கள் அனைவரும் இந்த வருடம் மிக திறமையாக நாடகம் நடிப்பதில் பங்கேற்க வேண்டும் என்று முடிவு செய்து மிகவும் ஆர்வமாக தயாரானோம்.

இந்த வருடம் எனக்கும் என் அக்காவிற்கும் இராவணனாக நடிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. நாங்கள் மிக ஆர்வமாக எங்கள் கதாபாத்திரங்களை நடித்துப் பழகினோம். நான் காட்சி 17இல் இராவணனாக நடித்தேன். கலை விழா நாளும் வந்தது. நான் காலையில் நேரத்திற்கு எழுந்து, கலை விழா நாடகத்தில் நடிப்பதற்கு தேவையான பொருட்களை எடுத்து ஆய்த்தமானேன். நாங்கள் அனைவரும் வீட்டிலிருந்து மதியம் பன்னிரண்டு மணி அளவில் பகாய் மண்டபத்திற்குப் புறப்பட்டோம். மண்டபத்திற்கு சென்று அங்கே பதாதைகள் கட்டி அலங்கரித்தோம்.

குறித்த நேரமாகிய மாலை நான்கு முப்பது மணி அளவில் விழா ஆரம்பமானது. முதலில் மங்கள விளக்கு ஏற்றப்பட்டது. மங்கள விளக்கை மூத்த ஆசிரியரும், அதிபரும், பாடசாலைத் தலைவரும் ஏற்றினார்கள். அதனைத் தொடர்ந்து பாடற்குழு மாணவர்கள் ஆகிய நாங்கள், பாடசாலைக் கீதம் கல்லூரிக் கீதம் மற்றும் தேசிய கீதம் ஆகிய கீதங்களைப் பாடினோம்.

அடுத்து நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. முதலில் பாலர் முன் பள்ளி மாணவர்கள் தமது நிகழ்ச்சியை தொடங்கினார்கள். அழகாக நடனங்கள் ஆடினார்கள். அதனைத் தொடர்ந்து பாலர் கீழ் பிரிவு, பாலர் மேற்பிரிவு, முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு என்ற வரிசையில் ஆண்டு ஐந்து வரை

மாணவர்கள் தாம் பயிற்சி செய்த நிகழ்ச்சிகளை பாடியும் ஆடியும் நடித்தும் காட்டினார்கள்.




அதனைத் தொடர்ந்தது தலைவர் உரை, அதிபர் உரை மற்றும் விருந்தினர் உரை, ஆகிய உரைகள் நடந்தேறின. சென்ற வருடம் H.S.C பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. ஆசிரியர்கள் செய்த சேவைக்காக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். சிறந்த மாணவர்களுக்கான கேடயங்கள் வழங்கப்பட்டன. அடுத்து இடைவேளை விடப்பட்டது. இடைவேளையைத் தொடர்ந்து நமது நாடகம் இராமாயணம் ஆரம்பமானது.

முதலில் ஆண்டு ஆறு மாணவர்கள் இராமாயணத்தின் ஆரம்பக் காட்சியைத் தொடங்கினார்கள். தொடர்ந்து ஏழாம், எட்டாம், ஒன்பதாம் ஆண்டு மாணவர்கள் தத்தமது காட்சிகளை சிறப்பாக நடித்தார்கள். ஆண்டு பத்தில் நான் இராவணனாக நடித்தேன். சிவப்பு நிற ஆடை அணிந்து, மீசை ஒட்டி, கிரீடம் தரித்து கையில் வாளோடு இராவணனாகக் காட்சி தந்தேன்.

நான் எனக்கு தரப்பட்ட காட்சிக்கான வசனங்களை ஒரு பிழையும் இன்றி நடித்து முடித்தேன். அவ்வாறே எனது சக தோழர் தோழியரும் தத்தமது பாத்திரங்களை அழகாக நடித்தார்கள். இராமாயணம் நாடகம் சிறப்பாக நடந்தது. எல்லோரதும் பாராட்டை பெற்றது. இறுதியாக இராமர் முடிசூட்டுவிழா, அதில் எனது அக்கா மீண்டும் நடனம் ஆடினார். இவ்வறாக 36 ஆம் ஆண்டு கலை விழா எங்கள் பாடசாலையில் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது.




நாங்கள் எல்லோரும் மேடையில் ஏறி புகைப்படங்கள் எடுத்துக் கொண்டோம். எல்லோரதும் பாராட்டையும் பெற்று வீடு திரும்பினோம்.

சிவலிங்கேசர் சிவகுமார் (ஆண்டு 10)

**சிறுகதை வாசிப்பு அனுபவம்**
**அமரர் கல்கியின் கடிதமும் கண்ணீரும்**

அண்மையில் எனக்கு பிரசித்தி பெற்ற எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தி எழுதிய ஒரு சிறுகதையை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அக்கதையின் தலைப்பு கடிதமும் கண்ணீரும் என்பதாகும். 1930 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இக்கதை அன்னபூரணி தேவி என்பவற்றின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை விளக்குகிறது.



ஒன்பது வயதில் கணவரை இழந்த அன்னபூரணிதேவி பிற்காலத்தில் பெண்களுக்கு "தேவி வித்தியாலயம்" எனும் பெயரில் கணவனை இழந்த பெண்களுக்கு ஒரு ஆசிரமத்தை நடத்தி வந்தார். ஒரு நாள் ஆசிரமத்தில் பணியாற்றுபவர் ஒருவர் காதல் பொய் என்று சொல்ல, அதனைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட அன்னபூரணி தனக்கு பல வருடங்களுக்கு முன்பு நடந்த காதல் தோல்வியை விளக்கி அக்காதல் தோல்விதான் அவர் பெண்குலத்திற்கு செய்யும் அனைத்துத் தொண்டிற்கும் காரணம் என்று விளக்குவது தான் கதை.


காதல் தோல்வி, மற்றும் கணவரை இழந்த பெண்களை பற்றிய இக்கதை எனக்கு சோகத்தைத் தந்தது. அன்னபூரணிதேவி கதையின் தொடக்கத்தில் கண்ணீர் விட்டதிலிருந்து கதையின் முடிவில் காதல் தோல்வியை விளக்கி முடிக்கும் வரை நம்மை மகிழ்விப்பது போல் ஒரு காட்சியும் காணப்படவில்லை. முழுக்க முழுக்க சோகம் நிரம்பிய கதையாகவே திகழ்ந்தது.

இக்கதையின் மூலமாக எழுத்தாளர் 1930ஆம் ஆண்டில் கணவனை இழந்த பெண்களின் பரிதாபமான நிலைமை, கல்வியின் முக்கியத்துவம் மற்றும் காதல் ஏற்படுத்தக்கூடிய உத்வேகத்தை உணர்த்த முயன்றிருக்கிறார்.

அன்னபூரணிதேவி ஒன்பது வயதில் கணவரை இழந்ததை பற்றி "அவ்வளவு இளம் வயதில் விதவையானதில் ஒரு சௌகர்யம் இருந்தது... நாலைந்து வருடங்களுக்கு பிற்பாடு அப்படி நேர்ந்திருந்தால் எல்லாரையும் போல்

என்னையும் அலங்கோலம் செய்திருப்பார்கள்." என்று கூறுகிறார். இக்கூற்றிலிருந்து, 1930களில் கணவரை இழந்த பெண்களின் பரிதாபமான நிலைமை எனக்கு புரிந்தது.

இரண்டாவதாக அன்னபூரணிதேவி தன் காதலை தொலைத்ததைப் பற்றி "அவருடைய கடிதத்தை அன்றைய தினம் நான் படிக்கவில்லை. ஒரு வருடத்திற்கு பிறகு தான் படித்தேன்" என்று கூறும் பொழுது அவருக்குப் படிக்கத் தெரிந்திருந்தால் தனது காதலை தொலைத்திருக்க மாட்டார் என்று நான் புரிந்து கொண்டேன். இதன் மூலமாக எழுத்தாளர் கல்வியின்மையால் நாம் நழுவவிடக்கூடிய வாய்ப்புகளை நான் எண்ணிப்பார்க்கிறேன்.




இறுதியாக அன்னபூரணிதேவி "அவர் கடிதத்தை பெற்ற அன்று ஏற்பட்ட அவமானமும் மனவேதனையும்தான் என்னை மேலும் மேலும் படிக்கும்படி தூண்டி, பி.ஏ.ல்.டி பட்டமும் அளித்தது, பெண் குலத்திற்கு செய்யும் இவ்வளவு தொண்டிற்கும் காரணமாயிற்று" என்று கூறுவதின் மூலமாக எழுத்தாளர் காதல் தோல்வி ஏற்படுத்தக்கூடிய உந்துசக்தியை உணர்த்துகிறார்.


இக்கதையின் வர்ணனை என்னை மிகவும் கவர்ந்தது. உதாரணத்திற்கு, அன்னபூரணி தேவி தன கதையை கூறி முடித்தபின் தனது கண்களிலிருந்து சிந்திய கண்ணீர் துளிகள் "வெண்ணிலாவின் ஒளியில் முத்துக்கள் போல் பிரகாசித்தன" எனறு வர்ணிக்கும்பொழுது என் மனக்கண்ணில் ஒரு விரிவான படத்தை உண்டாக்கியது. அனால், எனக்கு இக்கதையை படித்து முடித்த பின் இரண்டு குறைகள் இருந்ததாக தோன்றியது. முதலில், கல்கி உணர்த்த முயன்ற இரண்டு விடயங்கள், அதாவது கல்வியின் முக்கியத்துவம் மற்றும் காதல் தோல்வி ஏற்படுத்தக்கூடிய உத்வேகம் ஆகிவற்றில் ஒரு விடயமும் என் மனதில் ஆழமாகப் பதியவில்லை. இவ்விடையங்களை மேலும் விபரித்திருந்திருந்தால் ஒரு விடயமாவது மனதில் ஆழமாக பதிந்திருக்கும்.

வாசிக்கும்போது மிகவும் நெகிழ்ச்சியைத் தந்த சிறுகதை, அமரர் கல்கியின் 'கடிதமும் கண்ணீரும்'

கவின் கார்த்திக் (ஆண்டு 11)

**புது வெள்ளம் - பொன்னியின் செல்வன்: பாகம் ஒன்று**

அமரர் கல்வியின் “பொன்னியின் செல்வன்” கதை திரைப்படமாக வர இருப்பதை அறிந்து அப் புத்தகத்தை வாசிக்கும் ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. பொன்னியின் செல்வன் கதையின் முதல் புத்தகமான புது வெள்ளம் புத்தகத்தை வாசிக்க தொடங்கினேன். புத்தகத்தை படிக்க ஆரம்பித்ததில் இருந்து என்னால் பக்கங்களை புரட்டாமல் இருக்க முடியவில்லை. நேரம் போவது தெரியாமல், புத்தகத்தை மூடி வைக்க மனம் இல்லாமல் வாசித்து முடித்தேன்.




பத்தாம் நூற்றாண்டு சோழர் வம்சத்தைப் பற்றி எழுதப்பட்ட பொன்னியின் செல்வன் நாவலில் இளவரசன் அருள்மொழிவர்மன்,போர்வீரனும் இளவரசனுமான வல்லவராயன் வந்தியதேவன் ஆகியோரின் சாகசங்களை இப்பாகம் குறிப்பிடுகின்றது.

இக்கதையைப் படிக்கும் போது என்னை ஈர்த்த விடயங்களில் ஒன்று விரிவான வரலாற்று அமைப்பு. கல்கியின் விளக்கங்களை வாசிக்கும் போது நான் சோழப் பேரரசின் காலத்திற்கே சென்றுவிட்டேன் என்றே சொல்லவேண்டும். அரண்மனைகளின் கட்டிடக்கலை அழகு, அரசவையின் பிரம்மாண்டம், அக்காலத்தின் வளமான கலாச்சார மரபுகள் ஆகியவற்றை இந்நூல் தெளிவாக சித்தரிக்கின்றது.

பொன்னியின் செல்வனில் ஒவ்வொரு காட்சியின் போதும் நூலாசிரியர் கல்கி கதாபாத்திரங்களை சித்தரிப்பதுதான் புத்தகத்தில் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. குறிப்பாக அரசனுக்கு செய்தி சொல்ல புறப்படும் வந்தியத்தேவன், ஆபத்தின் போதும் கூட ஒழுக்க உணர்வும் சரியானதை செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் கொண்ட ஒரு பாத்திரமாக தனித்து நின்றான். கல்கி இவற்றை எழுதிய விதம் வசீகரமாகவும் சில சமயங்களில் வேடிக்கையாகவும் கடைசி வரை என்னை கவர்ந்திழுத்து வைத்தது.

சோழ சாம்ராஜ்யத்திற்குள் நடைபெற்ற அரசியல் சூழ்ச்சிகளையும் சதிகளையும் கண்டு நான் வியந்தேன். இளவரசன் அருள்மொழிவர்மனின் அரியணைக்கான பாதை பலரின் எதிர்ப்பை எதிர்கொண்டு கடினமான பணியாக இங்கு காட்டப்படுகிறது. எல்லா நிகழ்வுகளையும் ஆசிரியர் கல்கி

இணைத்திருப்பது, அடுத்து என்ன நடக்குமோ என்று என்னை ஆவலுடன் பக்கங்களை புரட்ட வைத்தது.

அடுத்து, கல்கி, ஆழ்வார்கடியான் என்ற கதாபாத்திரத்தை வெகு சிறப்பாகவும் எம்மை சிரிப்பில் மிதக்கவும் சித்தரித்துள்ளார். கதையில் எதிர்பாராத திருப்பங்கள் நிகழ்த்தவும், நிகழ வேண்டிய திருப்பங்களைத் தடுத்து நிறுத்துவதும் தான் இந்த கதாபாத்திரத்தின் வேலை. ஆழ்வார்க்கடியான், வந்தியத்தேவனோடு செய்யும் குறும்பும், சிக்கலில் மாட்டும் போது அவனை காப்பாற்றும் விதமும் என்னை மேலும் மேலும் பக்கங்களை புரட்டிப் புரட்டி படிக்க வைத்தது.




அத்துடன் இக்கதை படிப்பது எவ்வளவு சுவாரசியமோஅதை போல் இக்கதைக்கு வரையப்பட்ட ஓவியங்களும் மிகவும் சுவாரசியமாகவும் வியப்பாகவும் இருந்தது. அத்துடன் புத்தகத்தில் பயன்படுத்தப்பட்ட மொழி எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. என்னைப் போன்ற நவீன வாசகர்கள் புரிந்து கொள்ளும் வகையில் வரலாற்றுக் காலகட்டத்தை கல்கி விவரித்துள்ளார்.

மொத்தத்தில் பொன்னியின் செல்வனின் புதுவெள்ளம் அந்த நாவலின் தொடருக்கு ஒரு சிறந்த தொடக்கமாக இருந்தது. காலத்தால் அழியாமல் எல்லா தமிழ்த் தலைமுறைக்கும் படிக்கும் கதையாக திகழ்கிறது. "வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான் "என்பதைப் போல் கல்கியின் இக் காவியம் என்னை ஒரு முழு நிறைவுடன் வாசிக்க தூண்டி உள்ளது எனலாம்.

அஷ்வின் ராஜ்குமார் (ஆண்டு 11)

**கண்ணீர் அஞ்சலி**




கண்ணீர் அஞ்சலி செய்கின்றோம்
கலங்கி நாங்கள் அழுகின்றோம்
எண்ணி எண்ணிப் பார்க்கின்றோம்
எமக்காக நீங்கள் செய்த சேவைகளை

முத்தமிழை முறையாய் பயின்றவர் நீங்கள் - அதில்
மூன்றாவது தமிழை எமக்கு பயிற்றுவித்தவர் நீங்கள்
இயற்றமிழை எங்களுக்காய் எழுதியவர் நீங்கள்
எப்படி பேச வேண்டும் என்று கற்பித்தவர் நீங்கள்

முப்பத்தாறு வருடங்களை எமது கல்வி நிலையம்
முடித்து விட்டது என்று பெருமிதம் கொள்கின்றோம் - அதில்
ஆறு வருடங்களில் அதன் வளர்ச்சிக்கான அத்திபாரம் இட்டு
அழகு பார்த்த உங்களை நினைக்கின்றோம்

நாடகம் கவியரங்கம் கருத்தரங்கம் எல்லாவற்றிலும்
நாவன்மையால் முத்திரை பதித்தவர்கள் நீங்கள்
நாலுந் தெரிந்தவர் என்று பலராலும் போற்றப்பட்டவர்
நாகலிங்கம் மகேசன் ஐயா ஆகிய நீங்கள்

கண்ணீர் அஞ்சலி செய்கின்றோம்
கலங்கி நாங்கள் அழுகின்றோம்
எண்ணி எண்ணிப் பார்க்கின்றோம்
எமக்காக நீங்கள் செய்த சேவைகளை

தமிழ்க் கல்வி நிலையம்
ஹோம்புஸ்

எமது தமிழ் மாணவர்களின் எழுதும் ஆற்றலை ஊக்குவிக்கும் முகமாக உருவாக்கப்பட்ட தமிழ்க்கதிர் என்ற இச்சஞ்சிகை உருவாவதற்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் குறிப்பாக தமது படைப்பாற்றல்களை உருவாக்கி இந்த மலரிலே பங்கெடுத்த அனைத்து மாணவர்களுக்கும், வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் உங்கள் படைப்பாற்றலை வளர்க்கும் களமாக எதிர்வரும் தமிழ்க்கதிர் சஞ்சிகையைப் பயன்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி
வணக்கம்.

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

Tamil Study Centre, Homebush
PO Box 4032
Rochester Street
Homebush, NSW 2140
Australia

Web: http://www.tsch.org.au
Email: info@tsch.org.au